★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 14 ரபி. ஆகி 12 இதழ் 349

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27—1—83

ஐலன்ட்

ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்

க/L 83 கலை வர்த்தகம்

புதிய பிரிவு

DAY CLASS:- 31-1-83

திங்கள் 7 மணி.

WEEK-END:- 4-2-83

வெள்ளி 8-15 மணி

5988

## வடபகுதி பொலிசாருக்கு நவீன ஆயுதம்?

(இ. கந்தசாமி)

வடபகுதியில் கடமையாற்றும் பொலிஸார், நவீன ஆயுதங்களைக் கையாள பயிற்சி அளிக்கவேண்டும் என்றும் அவர்கள் 'பிஸ்டல்' வைத்திருக்க அனுமதிக்கவேண்டும் என்றும் நேற்று நடைபெற்ற பொலிஸ் அத்தியட்சகர்கள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

இதுசம்பந்தமான கோரிக்கையை ஜனாதிபதியிடம் இன்று கையளிப்பதென்றும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இம்மகாநாட்டை பொலிஸ் மாஅதிபர் திரு. ருத்ரா ராஜ

(4ம் பக்கம் பார்க்க)

★ பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கோரி

# யாழ். வரலாறுகாணாத மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

## அமைதியாக நடந்தது

(யாழ்ப்பாணம்)

**நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நேற்று, யாழ். நகரில் வரலாறு காணாத பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்தது! இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுடன் யாழ். நகரிலுள்ள பல பாடசாலைகளையும் சேர்ந்த மாணவ மாணவிகளும் உற்சாகமாகக் கலந்து கொண்டனர்!**

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் திரு. வ. சு. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தின்போது சுலோக அட்டைகளையும் மாணவர்கள் தாங்கிச் சென்றனர்.

இந்தஆர்ப்பாட்ட ஊர்வலத்தினால், யாழ். நகரிலுள்ள பிரதான் சந்திகளில் ஒரு மணித்தியாலத்துக்குமேல் வாகனப் போக்குவரத்து தடையானது. மாணவர்களின் ஊர்வலம் இரண்டு பிரிவுகளாக ஆரம்பித்தது:

முதலாவது பிரிவு காலை 8 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து புறப்பட்டு கச்சேரி- நல்லூர்வீதி- கண்டி வீதி- பழைய பூங்கா வீதி ஊடாக வந்து பரியோவான் கல்லூரி மாணவர்கள்- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள், சென்ஜோன்ஸ் அக்கடமி மாணவர்களையும் ஒன்று சேர்த்துக் கொண்டு மீண்டும் கண்டிவீதிவழியாகச் சென்று, புனித சம்பத்தரிசியார் கல்லூரி, திருக்

(8-ம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் தென் இந்திய யாத்திரிகர்களுடன் கோர விபத்துக்குள்ளாகி ஸ்தலத்திலேயே இருவரைப பலி எடுத்த மினி பஸ்ஸின் தோற்றத்தை இங்கு காணலாம்.

## புலேந்திரன் கொலை: 'தடை இயக்கத்துக்கு சம்பந்தம் இல்லை' பொலிஸார் நம்பிக்கை

[வவனியா]

வவுனியா ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர் கா. த. புலேந்திரனின் கொலைக்கும், வடபகுதி தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்கும் சம்பந்தமில்லை என்று பொலிஸ் வட்டாரங்கள் கருதுகின்றன.

புலேந்திரன்; தோட்டாக்கள் போட்டு சுடும்துப்பாக்கியினால் தான் சுட்டுக் கொலைசெய்யப்பட்டிருப்பதாக விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

இதுவரை காலமும் வடபகுதியில் இடம்பெற்ற கொலைச்சம்பவங்களுக்கும் இக்கொலைக்கும் பல முரண்பாடுகள் இருப்பதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பொதுமக்களின் ஒத்துழைப்புக்கிடைத்தால் அதிவிரைவில் கொலைஞர்களைப் பிடித்துவிட முடியும் என்று பொலிஸ் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

புலேந்திரனின் கொலைசம்பந்தமாக பத்துக்கும் அதிக மானவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி விபத்து:

## மூன்று சடலங்களுடன் 21 யாத்திரிகர்கள் தாயகம் புறப்பாடு!

[யாழ்ப்பாணம்]

தலயாத்திரையின் போது கிளிநொச்சியில் கோரவிபத்தில் பலியான தமிழ் நாட்டு யாத்திரிகர்கள் மூவரின் சடலங்களும் கப்பல்மூலம் தமிழ் நாட்டுக்கு அனுப்புவதற்காக நேற்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து மன்னாருக்கு எடுத்துச் செல்லப்பட்டன. விபத்தில் கொல்லப்பட்டவர்களுடன் பயணம் செய்த மற்றும் யாத்திரிகர்களில் 21 பேரும் கூடச் செல்கின்றனர். 12 யாத்திரிகர்கள் இங்கு தங்கிச் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இங்கிருந்து அனுப்பட்ட மூவரின் சடலங்களும் பாதுகாப்பான முறையில் சீல் வைக்கப்பட்டுப் பத்திரமாக எடுத்துச் செல்லப்பட்டன.

யாழ். அரச அதிபரின் பிரதி

(8-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் அஞ்சலி

(கே. வி. கே. திருலோகமூர்த்தி)

கிளிநொச்சியில் கோரவிபத்தில் உயிர்நீத்த தமிழக யாத்திரிகர் மூவரின் சடலங்கள் தமிழகத்திற்கு அனுப்புவதற்காக மன்னார் செல்லும் வழியில் கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்தில் கிளிநொச்சி மக்கள் அஞ்சலிக்காக ஒருமணி நேரம் வாகனம் தரித்துச்சென்

(8ம் பக்கம் பார்க்க)

திறப்பு விழா

28-01-1983 வெள்ளிக்கிழமை மாலை

யாழ்ப்பாணம்,

கண்டி வீதி, இல: 261-ல் அமைந்துள்ள

புஷ்பா ரயர் டீலேர்ஸ்

எனும் எமது ஸ்தாபனம் பிரதம தொழில் அதிபர்

T. சண்முகலிங்கம் J. P.

அவர்களால் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்படும்

அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்

திரு. திருமதி க. தவராசா,

(உரிமையாளர்கள்)

விளம்பரம்: மணிக்குரல் மேஜர் ஷண்

5987

## பருத்தித்துறை மாவட்ட நீதிபதியை நள்ளிரவில் வழிமறித்து தரக்குறைவாக நடந்தனர்!

### இராணுவ சிப்பாய்கள் பற்றி புகார்

(புலோலி)

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ரி. கே. லகனே இரவு நேரத்தில் வழிமறித்த இராணுவ சிப்பாய்கள் சிலர் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டதுடன் இழிவாகவும் பேசிதாக திரு. திலகன் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்குப் புகார் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவரெனக் கூறப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர்மீது பருத்தித்துறைப் பொலிசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த தென்னிலங்கை நீதிபதிகள் குழுவொன்றுக்கு யாழ்ப்பாணம் நீதிபதி இல்லத்தில் நடைபெற்ற இரவு விருந்துபசாரத்தில் கலந்து கொ

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

புடவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை பிறதர்ஸ், 21, புதிய மக்கள் நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 5954

நெசவு வேலையில் அநுபவமுள்ள பெண்கள் உடன் தேவை. சம்பள விபரம்: 5½ யார் சேலைக்கு 15 ரூபா, 4 யார் வேட்டிக்கு 10 ரூபா. உடன் விண்ணப்பிக்கவும். அருணகிரி இன்டஸ்ரீஸ் 42, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பழகவிரும்புவோருக்கும் இடம் உண்டு. தங்குவதற்கும் இடவசதியுண்டு. 5953

இறக்குமதிசெய்யப்பட்ட நவீன தச்சுவேலை இயந்திர இயக்குனரும் தளபாடம் செய்வதில் மிக அனுபவம் உள்ளவர்களும் உடன் தேவை. ஆங்கில அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. தகைமைகளுடன் இம்மாதம் 30-1-83-ம் திகதி பிற்பகல் 4 மணிக்குமுன் எம்முடன் நேரில் தொடர்புகொள்ளவும். உரிமையாளர், கணேசானந்தா ஸ்ரோஸ், 244 [462], ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5959

## விற்பனைக்கு

நல்ல சுற்றுடலில் உள்ள 1¾ பரப்பு காணி, கல்வீட்டுடன், மாட்டின் ரோட்டில் உடன் விற்பனைக்குண்டு. B. F. சேவியர், 37/8. மாட்டின் ரோட் மேற்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 5963

Peugeot [illegible] கார் நல்ல நிலைமையில் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு 37, கொழும்புத்துறை ரோட், சுண்டிக்குளி. (5975)

சுன்னாகம் பெரிய மதவடி நூல்நிலையத்திற்கு எதிர்ப்புறமாக செல்லும் வீதியில், மெயின் வீதியிலிருந்து 250 யாருக்குள் 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. முழுதாகவோ, பகுதியாகவோ விற்கப்படும். விபரங்களுக்கு 15-2-83க்கு முன்னர் K சிவானந்தராஜா, 'சிவானந்தபுரி', புத்தூர் என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும். (5973)

## பயிற்சி

கொம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம் 5-2-83 முதலில் சேரும் 25 மாணவர்களுக்கு கட்டணத்தில் அரைவாசிக்கட்டணங்கள் அறவிடப்படும். விபரம் நேரில், The School of Computer Studies, 52/1, கனகரத்தினம், கட்டிடம், (வீனஸ் றெக்கோடிங் பார், மேல்மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5965

## சமையல்காரர் தேவை

கூட்டுறவு சைவ சிற்றுண்டிச்சாலைக்கு சகலவிதமான பலகார வகைகளும் தயாரிக்கக்கூடிய சமையல்காரர்ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். 31-1-83க்கு முன்னர் நேரில் விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்
கட்டைவேலி நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்
கரவெட்டி
(5977)

# 'வரலாறுதான் அறிஞர்களை உருவாக்கித் தருகிறது'

(யாழ்ப்பாணம்)

''வரலாறு தான் அறிஞர்களை உருவாக்கித்தருகின்றது. அந்த வரலாற்றுப் போக்கில் தனது விஷேசமான ஆற்றலையும், ஆளுமையும் சமகாலச் சமுதாயத் தேவைகளுக்கு ஒரு மனிதன் வெற்றிகரமாகப் பிரயோசிக்கும் போது அவன் சமுதாயத்தால் அறிஞனாக மேதையாகப் போற்றப்படுகின்றான். இந்த வகையிலே தான் மறைந்த பேராசிரியர் கைலாசபதி சமுதாய அந்தஸ்துப் பெற்ற அறிஞராக மக்களால் போற்றப் படுகிறார்.''

இவ்வாறு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் இருபாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் பேராசிரியர் க. கைலாசபதிக்கு நடத்திய அஞ்சலிக் கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்திய திரு. கே. செந்திவேல் குறிப்பிட்டார். கவிஞர் இ. முருகையன் தலைமையில் நடைபெற்ற மேற்படி அஞ்சலிக் கூட்டத்தில் திரு. செந்திவேல் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பேராசிரியர் கைலாசபதி தனக்கு முந்திய பேராசிரியர்களையும் தனது சமகாலப் பேராசிரியர்களையும் விட வித்தியாசமான ஒருவராக வாழ்ந்தார். அதாவது கல்வி கற்றோர் மட்டத்தில் மட்டுமன்றி சாதாரண உழைக்கும் மக்கள் மத்தியில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியவராகவும் வாழ்ந்தார். அதற்கு அடிப்படையான காரணம் உழைக்கும் வர்க்கம் சார்ந்த சமூக விஞ்ஞானக் கண்ணோட்டம் கொண்ட மார்க்சிச லெனினிசத் தத்துவத்தை அவர் இறுதிவரை உறுதியாகப் பின்பற்றியவராக வாழ்ந்தமையேயாகும் என்றார்.

## பச்சிலைப்பள்ளி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம், பளை

# வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கிட்டத்தட்ட 4000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. கேள்விப் படிவங்கள் ரூபா 100/- மீளப்பெறும் வைப்பாகச் செலுத்தி சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஏற்கனவே செலுத்தியோர் இம்முறை செலுத்தவேண்டியதில்லை. வெற்றுச் சாக்குகளை சங்க அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விண்ணப்பங்கள் யாவும் 12-2-83க்கு முன் முத்திரையிடப்பட்ட பதிவுத்தபால்மூலம் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல்வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்' எனக் குறிப்பிடுதல்வேண்டும்.

இங்ஙனம்,
பொதுமுகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. ச.
பளை.
(5967)

## வவுனியா வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் நெடுங்கேணி

# உழுந்து விற்பனைக்கான கேள்விப்பத்திரம்

மேற்படி எமது சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்ட தரமான 12420½ கிலோ உழுந்து கொள்வனவுசெய்ய விரும்புபவரிடம் இருந்து கேள்விப்பத்திரம்கோரப்படுகின்றது.

கொள்வனவு செய்யவிரும்புவோர் ஒரு கிலோ உழுந்து கொள்வனவு செய்ய இருக்கும் விலையை எண்ணிலும், எழுத்திலும் குறிப்பிட்டு சரியான முகவரியுடன் 9-2-83ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபால்மூலமோ அன்றேல் நேரடியாகவோ தலைவர், வவுனியா வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''உழுந்து கொள்வனவிற்கான கேள்வி'' என குறிப்பிடப் படல்வேண்டும்.

கொள்வனவு செய்யப்பட்ட முழு உழுந்தையும் சங்கத்தால் குறிப்பிடப்படும் நாளுக்குள் முழுப்பணமும் செலுத்தி சங்கவளவிற்குள் இருந்தும் அப்புறப்படுத்தல் வேண்டும். சங்கத்தின் முடிவே இறுதியானதாகும்.

க. சபாரத்தினம்
பொதுமுகாமையாளர்
வ. வ. ப. நோ. கூ. சங்கம்,
நெடுங்கேணி,
1983-01 24.
(5979)

## மேலும் மூன்று பொலிஸ்நிலையங்கள்

[மன்னார்]

மன்னார் பகுதியில் மேலும் 3 புதிய பொலிஸ் நிலையங்கள் விரைவில் அமைக்கப்படும்.

அடம்பன், உயிலங்குளம், பேசாலை ஆகிய இடங்களிலேயே புதிய பொலிஸ்நிலையங்கள் அமைக்கப்படும்.

புதிய பொலிஸ்நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

## கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா

[சுண்டிக்குளி]

சேரனின் 'இரண்டாவது சூரிய உதயம்' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை ப. நோ. கூ. ச.மேல் மாடி மண்டபத்தில்; நா. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

தெல்லிப்பழை-வயல் கலை இலக்கிய வட்டம் நடாத்தும் இவ்வெளியீட்டு விழாவில் 'வயல்' முதலாவது இதழின் வெளியீடும் இடம்பெறும்.

எம். ஏ. நுஃமான் வெளியீட்டுரை வழங்குவார். பேராசிரியர் கா. சிவத்தம்பி, திருவாளர்கள் க. ஆதவன், அ. யேசுராசா, பி. நடராஜன் ஆகியோர் கவிதைத் தொகுதியினை விமர்சனம் செய்வார்கள். நூலாசிரியர் உ. சேரன் பதிலுரை வழங்குவார்.

## சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாச

# அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு

கல்வியில் பின்தங்கிய வசதியற்ற பிள்ளைகளின் கல்வி நிதிக்காக 28-4-83ம் திகதி தொண்டமனாறு செல்வச் சந்நிதியில் அதிஷ்டம் பார்க்க இருந்த மேற்படி சமாசச் சீட்டிழுப்பு அங்கத்துவக் கழகத் தலைவர்களினதும், நண்பர்களினதும் வேண்டுகோளுக்கிணங்க 1-4-83ம் திகதி மாலை 4 மணிக்கு அதேயிடத்தில் அதிஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

இ. மு. நாகலிங்கம்
தலைவர்
ச. மு. க. ச.
மாவிட்டபுரம்
தெல்லிப்பளை
(5981)

## இலக்கிய சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

'விசை, இலக்கிய அமைப்பின் ஆதரவில் இலங்கை தமிழ்ச் சிறுகதை முன்னோடிகளான திரு. கி. வைத்திலிங்கம், திரு. க. தி. சம்பந்தன் ஆகியோருடன் இலக்கிய சந்திப்பொன்று 28-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணியளவில் ஆஸ்பத்திரிக்கு முன்னாலுள்ள தனியார் கல்வி நிலையத்தில் இடம்பெறவிருக்கின்றது.

## லொறிச் சாரதி தேவை

வலிகாமம் கிழக்கில் வசிப்பவராகவும், பத்து வருட அனுபவம் உள்ளவராகவும், 30-45 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல்வேண்டும். சங்க விதிகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும். 5-2-83-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

தலைவர்
வலி. கிழக்கு வாழைக்குலைச் சங்கம்.
நீர்வேலி. 5964

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் துந்துபி வருடம் தை மாதம் 17-ம் திகதி [30-1-83] ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரையுள்ள சுபவேளையில்,

| எமது சிரேஷ்ட புத்திரன் | எமது சிரேஷ்ட புத்திரி |
|---|---|
| கணேசராசா | நவராணி |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருமணம் நடாத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்பசமேதராக சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

[வரவேற்புபசாரம் மணமகன் இல்லத்தில் பிற்பகல் 4-30 மணி தொடக்கம் 8-30 மணிவரை நடைபெறும்.]

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு. ஐ.இராசதுரை தம்பதிகள் | திரு. வே. கனகரெத்தினம் தம்பதிகள் |
| 13/5, கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை, | 'நவபவனம்', 628/3, காங்கேசன்துறை வீதி, |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

[5960]

# குளோபல் அக்கடமி

GLOBAL ACADEMY.

குளோபல்
கொம்மியூனிகேசன்ஸ் லிமிட்.,
கூட்டுறவுப் பணிமனை,
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23015

1983 டிசம்பர் G. C. E. (O. L.)
1983/1984 G. C. E. (A. L.)

காலை-மாலை நேர வகுப்புகள்
ஆரம்பம்: 28-01-83 மாலை 4-30 மணி

● G. C. E. (O. L.) ஆசிரியர்கள்

| | |
|---|---|
| கணிதம்: | விக்னேஸ்வரவேல் |
| விஞ்ஞானம்: | முத்துலிங்கம், புவனேந்திரன் |
| ஆங்கிலம். தமிழ்- | யோகலிங்கம் |
| சமூகக்கல்வி: விவசாயம்- | பொன். செல்வராசா |
| சுகாதாரம்: வர்த்தகம்- | காந்தராசா |
| சமயம்: | சபா நடேசன் |

● G. C. E. (A. L) ஆசிரியர்கள்

| | |
|---|---|
| பௌதிகம்: | சந்திரன் (யாழ். வளாகம்) |
| இரசாயனம்: | பிரபல ஆசிரியர் |
| தாவரவியல்: | அன்ரன் [B. Sc.] |
| விலங்கியல்: | ஞானேந்திரன் [B. Sc.] |
| தூயகணிதம்: | நந்தன் [யாழ். வளாகம்] |
| பிரயோக கணிதம்: | சிவகுமார், வேலாயுதம் [B.Sc] |
| Basic Maths: | எஸ்.விக்னேஸ்வரவேல் [B Sc] |

5962

# வினோபாஜிக்கு 'பாரதரத்னு' விருது

# சீர்காழி, பிரேம்நவீர் 'பத்மஸ்ரீ' விருது

புதுடில்லி, ஜன. 26

பூதானத்தலைவர் ஆச்சாரிய வினோபாஜிக்கு பாரதத்தின் தேசிய அதி உயர் விருதான 'பாரதரத்னு' விருது வழங்கப்பட்டுள்ளது. 'பத்மபூஷண்' தேசிய விருது எவருக்கும் இம்முறை வழங்கப்படவில்லை.

34வது குடியரசு தினத்தை ஒட்டி ராஷ்டிரபதி வெளியிட்டுள்ள தேசியவிருது பட்டியலில் மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தேசிய விருதுகள் பெறுவோர் பட்டியலில்; மலையாள திரைப்பட நடிகர் ஜனுப் பிரேம் நஸீர், சீர்காழி கோவிந்தராஜன் ஆகியோர் உட்பட 50பேருக்கு 'பத்மஸ்ரீ' விருது வழங்கப்பட்டுள்ளது.

சிறப்புச்சேவை புரிந்துள்ள பாரத பொலிஸ் சேவையிலுள்ள 22பொலிஸ் அதிகாரிகளுக்கும், 12ஊர்காவல்படை வீரர்களுக்கும் பாரத ராஷ்டிரபதி பதக்கம் வழங்கப்பட்டுள்ளது விருதுகளும், பதக்கங்களும் ராஷ்டிரபதி பவனில் வைத்து ராஷ்டிரபதி ஸெயில்சிங் விருதுவழங்கும் வைபவத்தில் வழங்கவுள்ளார். (உ)

## அங்கிலிக்கன் பேராயர் இன்று யாழ், விஜயம்

(அரியாலை)

அங்கிலிக்கன் கொழும்பு திருமண்டலப் பேராயர் அதிவணக்கத்துக்குரிய சுவிதின் பெர்னாண்டோ ஆண்டகை இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்கிறார்.

இவர் யாழ்ப்பாண அங்கிலிக்கன் திருச்சபைகளின் குருமார்களின் கூட்டத்திலும், சபைகளின் காரியநிர்வாக உறுப்பினர்களின் கூட்டத்திலும் கலந்துகொண்டு அருளுரை நிகழ்த்துவார்.

இவர், தென்னிந்திய திருச்சபையின் யாழ் திருமண்டலப் பேராயர் அதிவணக்கத்துக்குரிய டி. ஜே. அம்பலவாணர் அண்டகையையும், யாழ் கத்தோலிக்க திருமண்டல ஆயர் பேரருட்திரு. தியோகுப்பிள்ளை ஆண்டகையையும் சந்தித்து உரையாடுவார்.

## வருடாந்த நிகழ்ச்சி

(அரியாலை)

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஜக்கிய சங்கத்தின் வருடாந்த நிகழ்ச்சி இம்மாதம் 29ந்திகதி சனிக்கிழமை காலை யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் சங்கத் தலைவரும் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனப் பேராயர் டி. ஜே. அம்பலவாணர் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ளது. புதிய வருட உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும். (அ)

# "தேசிய நலனை பலப்படுத்த முன்வர வேண்டும்"

## பாரத ராஷ்டிரபதி குடியரசு தினச்செய்தி

(புதுடில்லி)

"மக்கள் தமது ஒற்றுமையைப்பலப்படுத்தி, பாரதத்தின தேசிய நலனை வலுப்படுத்த; சொல்லிலும் செயலிலும் முன்வரவேண்டும். உட்பகைமை யுணர்வுகளுக்கு இடமளிக்காதுசந்தர்ப்பவாதக் கொள்கைகளினால் திசைதிரும்பாது தேசிய நல உணர்வுகளுக்கு முதன்மைகொடுக்க வேண்டும்"

இவ்வாறு பாரத ராஷ்டிரபதி ஸெயில்சிங் 34வது பாரத குடியரசு தினத்தையொட்டி விடுத்துள்ள வானொலி செய்தியில் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாரத குடியரசுதின விழா நேற்று புதுடில்லி. சென்னை ஆகிய இடங்களில் பெருவிழாவாகவும், ஏனைய மாநிலத்தலைநகர்களிலும். நேருவிளையாட்டரங்கிலும், சிறப்பாகவும் நடைபெற்றது மாநிலங்களில் குடியரசுதினத்தை முன்னிட்டு பல நல்வாழ்வுத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. குடியரசுதினவிழாவில் படைகளின் அணிவகுப்புகள், பாடசாலை மாணவ-மாணவியரின் அணிவகுப்பு. நடனக்குழுக்களின் கலைநிகழ்ச்சிகள், சாரணர் சாரணிகளின் அணிவகுப்பும் இடம்பெற்றன.

34வது குடியரசுதினவிழாவின் சிறப்பு தலைமைவிருந்தினராக நைஜீரியா ஜனாதிபதி சகாரி கலந்துகொண்டார். நேற்றுக்காலை குடியரசு தினத்தை முன்னிட்டு ராஷ்டிரபதி ஸெயில்சிங்கை பிரதமர் இந்திராகாந்தி அழைத்துக்கொண்டு தேசிய வீரர்களின் சமாதிக்குச்சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.

புதுடில்லியில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதைகளை ராஷ்டிரபதியும், சென்னையில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதைகளை தமிழக ஆளுநர் எஸ். எல்.குரானவும் ஏற்றுக்கொண்டனர்,

தமிழக ஆளுநர் எஸ். எல். குரான விடுத்துள்ள குடியரசு தினச்செய்தியில்; "மதசார்பில்லாத ஜனநாயக மரபுவழியைப்பேணி தேசிய ஒருமைப்பாட்டில் ஒருமுகப்பட்டு ஒளிமயமான எதிர்காலத்துக்கான நீண்டபயணத்தை அடையத் திடசங்கல்பம்பூணுவோமாக என்று கேட்டுள்ளார். (உ)

# பா. உ. சண்முகம் ராஜினமா

சென்னை, ஜன. 26

அ. தி. மு. க. வின் பொதுச்செயலாளரும், அ. தி. மு. க. சட்டமேலவை உறுப்பினருமான திரு. பா. உ. சண்முகம், தமது சட்ட மேலவை உறுப்பினர் பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

திரு. பா.உ. சண்முகத்தின் ராஜினமா ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகசட்டமேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானகிராமணியாரும், தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனும் தனித்தனியே அறிவித்துள்ளனர்.

கட்சியின் முக்கிய உறுப்பினராகவும், அதே நேரத்தில் ஆட்சிமன்றங்களில் பொறுப்பான பதவியையும் ஒரேநேரத்தில் வகிப்பதற்கு இடமளிப்பதில்லை என்னும் அ. தி. மு. க. வின் ஒழுங்குக்கு அமையவே திரு. பா. உ. சண்முகம் தமது சட்டமேலவை உறுப்பினர்பதவியை ராஜினமாச் செய்துள்ளதாக தமிழக முதலமைச்சர் எம். ஜி ராமச்சந்திரன் தெரிவித்தார். (உ)

# பாரதகுடியரசுதினவிழாவில் நைஜிரியா ஜனதிபதி!

புதுடில்லி, ஜன. 26

பாரதமும், நைஜிரியாவும் இருதேசங்களின் நட்புறவை வளர்க்கவும், ஒத்துழைப்புகளை ஏற்படுத்தவும் விருப்பம்தெரிவித்துள்ளன.

நைஜீரியாவின் ஜனதிபதி சகாரி பாரதத்தின் 34வது குடியரசுதினவிழாவின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளும் பொருட்டு நேற்று முன்தினம் புதுடில்லிவந்துள்ளார். ஜனதிபதி சகாரிக்கு பாரத ராஷ்டிரபதி ஸெயில்சிங் தலைமையில் விமரிசையான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பாரதத்தின் தேசிய குடியரசு தினவிழாவில் நைஜீரிய அரசியல் தலைவர் ஒருவர் கலந்துகொள்வது இதுவே முதல்தடவையாகும்.

நைஜீரிய ஜனதிபதி புதுடில்லியில் தங்கியிருக்கும் போது பாரதப் பிரதமர் இந்திராகாந்தியையும், உப ராஷ்டிரபதி ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தினர். (உ)

# ஈழத்துசித்தர் வரலாற்றில் 'முதலிடம் வகிக்கும் கடையிற் சுவாமிகள்'

## தங்கம்மா உரை

(யாழ்ப்பாணம்)

"ஈழத்துச் சித்தர் வரலாற்றில் முதலிடம் வகிப்பவர் கடையிற் சுவாமிகளாவார். யாழ்ப்பாணத்தில் சித்தர் பரம்பரை ஒன்றிருந்ததென்றால் அதன் மூலவித்து நீராவியடியில் இருக்கும் இந்த இடம் தான் இவரின் வழிவந்தவர்கள்தான் செல்லப்பா சுவாமிகளும், அடுத்து யோகர்சுவாமிகளுமாவர்".

யாழ்ப்பாணம் நீராவியடியில் சமாதி அடைந்திருக்கும் கடையிற் சுவாமிகளின் ஆலயத்தில் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வாலயத்தில் இப்பொழுது திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வேலைகள் முடிவுற்றதும் 75 வருஷத்துக்கு முன்பு காசியிலிருந்து பேரம்பலச் செட்டியார் என்பவர் கொண்டுவந்த சிவலிங்கம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, ஆலயத்தில் வைக்கப்படவுள்ளது இந்த லிங்கத்துக்கருகில் அடி உயரமான வாலாம்பிகாதேவி சிலையும் மற்றும் மூர்த்திகளும் வைக்கப்பட்டிருக்கின்றன.

மேற்படி தேவஸ்தான தர்மகர்த்தாவும், பிரதம குருக்களுமான ப. சோமாஸ்கந்தக்குருக்கள் விசேஷ பூஜை ஆராதனைகளை நடத்தி, தேவார பாராயணத்துடன் ஆரம்பித்துவைத்தார்.

கடையிற் சுவாமிகள் சமாதி அடங்கிய ஆலயத்துக்கருகாமையில் தெற்குப் பக்கமாக சுவாமிகள் அப்பொழுது விளாங்கனி ஒன்றை எடுத்து 'இது சிதம்பரமடா' என்று எறிந்தாராம். சுவாமிகள் அன்று சொன்ன இடம் இன்று ஒரு சிதம்பரத்தைப் போல் அமைப்புக்கொண்ட ஆலயமாக அமைந்திருக்கிறது.

இந்த சிதம்பர ஆலயத்தில் சிதம்பரம் கனகசபையில் நடராஜப் பெருமான் காலைத் தூக்கிநின்று அண்ட சராசரங்களையும் ஆட்டிப் படைக்கும் பாணியில் ஒரே வார்ப்பில் உருக்கி வார்க்கப்பட்ட பிரமாண்டமான சிலை மூர்த்தமாக வைக்கப்பட்டுள்ளது. நடராஜப் பெருமானுக்கு வலது பக்கமாக பிள்ளையார் சிலை ஒன்று இருக்கிறது. இச்சிலை ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் வைத்து வணங்கியதென்று ஆலயக் குரு சொன்னார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அங்கு தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது;-

"கடையிற் சுவாமிகள் அருள் பெற்ற செல்லப்பா சுவாமிகள் பெரும்பித்தனாக இருந்திருக்கிறார். ஆனால் யோகர் சுவாமிகள் அப்படியல்ல. அவர் மக்களோடு மக்களாக வாழ்ந்து அருள் வழங்கிய அருளாளர்.

"மாணவர்களைக் கொண்டு ஓர் ஆசிரியரின் பண்பை அறியலாம். சீடர்களைக் கொண்டு குருவை அறியலாம். சுவாமி விவேகானந்தருக்கு குருவாக இருந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர். யோகர் சுவாமிகளுக்கு செல்லப்பா சுவாமிகளும், செல்லப்பா சுவாமிகளுக்கு கடையிற் சுவாமிகளும் குருவாக இருந்திருக்கிறார்கள்,

கடையிற் சுவாமி நீதிபதியாக இருந்தவர். ஆனால் இவரது வரலாறு எவருக்கும் தெரியாது.

"கடையிற் சுவாமிகள் ஒரு குடையையும் வைத்துக்

(7ம் பக்கம் பார்க்க)

## இந்திய மத்திய அமைச்சர் ராஜினமா

புதுடில்லி. ஜன. 26

இந்திரா காங்கிரஸ் கட்சியின் பாரதத்திில்வலுப்படுத்த மத்தியஅரசின்கப்பல்,போக்குவரத்துதுறைராஜாங்கஅமைச்சர் சீதாராம்சேஸ்திரி தமது அமைச்சர்பதவியைராஜினமா செய்துள்ளதாக பத்திரிகையாளருக்கு இங்கு நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சர் பதவியை ராஜினமா செய்துள்ள திரு. சீதாராம் சேஸ்திரி ஆளும்இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொருளாளராகத் தொடர்ந்தும்பதவிவகிப்பார் என்றும் அவர் தெரிவித்தார். (உ)

# 'இலவச உணவுடன் உடைகளும்வழங்கவேண்டும்'

## தமிழக அரசுக்கு யோசனை

சென்னை, ஜன. 26

"தமிழக மாநில அரசின் இலவசத்துணவுடன், உடைகளும் வழங்கப்படுமானல் தமிழக ஏழைக் குழந்தைகளின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படும். தகுதியும் ஆற்றலும் மிக்க பல குழந்தைகள், பிள்ளைகள் உணவு, உடை இல்லாததால் கல்வியைத் தொடரவோ, எதிர்காலத்தைப் பெறவோ முடியாதவர்களாகப் பின்தள்ளப்பட்டுள்ளனர்".

தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. இலட்சுமி காந்தன் மேற்கண்டவாறு தமிழக மாநில அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

"இரவிலும் ஏழைப்பிள்ளைகளுக்குத் தமிழக அரசினால் வழங்கப்படும் இலவசத்துணவுத் திட்டத்தை விரிவடையச் செய்வதன் மூலம் மாநில அரசின் கிராமப்புறத் தன்னிறைவுத் திட்டம் சிறப்புறுவதுடன் கிராமப்பிள்ளைகளின்வளமான வாழ்வுக்கு வழிசமைக்கப்படுவதாகவும் அமையும்" என்றும் அவர் தமது யோசனையில் கூறியுள்ளார். (உ)

# திருமதி. மா-ஸே-துங்குக்கு ஆயுட்காலச் சிறை!

பீகிங், ஜன. 26

மக்கள் சீனக்குடியரசின் தந்தையான காலஞ் சென்ற மாஸேதுங்கின் மனைவிக்கு சீன அரசினல் வழங்கப்பட்ட ஒத்திவைக்கப்பட்ட மரணதண்டனையை ஆயுட்காலச் சிறைத்தண்டனையாக நேற்று முன்தினம் குறைக்கப்பட்டுள்ளது.

1966-67ம் ஆண்டுக்கால சீனக்கலாசார புரட்சிக்குச்சூத்திரதாரியாக இருந்து, தேசிய நலனுக்கு விரோதமான நடவடிக்கைகளை நடத்தினர் என்னும் குற்றச்சாட்டின் பேரில் 1980ம் ஆண்டில் திருமதி மாஸேதுங்குக்கு ஒத்திவைக்கப்பட்ட மரணதண்டனை விதிக்கப்பட்டது. இவருக்கு வழங்கப்பட்ட மரணதண்டனை குறித்துசீன அரசுமறுபரிசிலனை செய்து ஆயுட்காலச் சிறைத்தண்டனையாகக் குறைத்துள்ளது. (உ)

### மணிவாக்கு

பலவீனர் அதிர்ஷ்டத்திலும் சோதிடத்திலும் நம்பிக்கை வைக்கின்றனர். பலமுடையவர்கள் காரண காரியத் தொடர்பிலேயே நம்பிக்கை வைக்கின்றனர்.

—எமர்சன்

## நமது நோக்கு

### தமிழ் எங்கே?

இலங்கை பத்திரிகை நிறுவனமும், இலங்கை மன்றக் கல்லூரியும் ஒன்றிணைந்து நடத்தும் பத்திரிகையாளர் பயிற்சி மாநாட்டில் தமிழ் பத்திரிகையாளர்களுக்கு இடமில்லாமல் போனது வேதனைக்குரியது; எவ்விதத்திலும் வியப்புக்குரியதல்ல.

ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பயிற்சி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவந்த பேர்வழிகள் உலகப் பிரசித்திபெற்ற ஜெர்மன் நிறுவனத்தின் மூன்று பிரதிநிதிகள்.

இலங்கைக்கு முதன்முதலாகவந்த இந்தப்பத்திரிகை நிபுணர்களின் பணி ஆங்கில, சிங்கள பயிற்சிவகுப்புகளுக்கே பிரயோசனப்படுகின்றது; இப்பெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இலங்கைப் பத்திரிகைச் சங்கம் தமிழை மறந்துவிட்டதென்று நினைப்பது தவறு.

ஆங்கிலம் உலகமொழி; சிங்களம் அரசாங்கமொழி; இவ்விரண்டிலும் ஒன்றுவது தெரியாதவர்களுக்கு என்ன பத்திரிகைத் தொழில்? என்று நினைப்பது இயற்கை; எந்த அடிப்படையிலும், எங்கள் பத்திரிகைக்கு அழைப்பு வராதது தமிழ் பத்திரிகைகள்—கொழும்போ அல்லது பிரதேசமோ—வேண்டாப் பெண்டிர்கள் என்ற மனப்போக்கு என்பதே;

பத்திரிகைகள் தேசிய ஒற்றுமையை உருவாக்கும் பெரும்சாதனங்கள் என்று வாசாலமாக மேடையில் பேசப்படும்; அதுபல்லக்குப் போல் சாட்சியளிக்கும்; தமிழ்மொழியென்றால் அது கால்நடைதான்; கால்நடை அபிவிருத்திக்குப் பாரிய திட்டமிடும் அமைச்சர் தொண்டமான் நாமறிந்த மொழிகளிலே, தமிழ்மொழி போல இவ்வாறு ஒதுக்கப்படும் மொழியை எங்கும் காணேனென்ற கர்ச்சனை எழுப்பமாட்டாரா? அவருடைய சொல்லு செல்லும் என்பதால் இவ்வாறு வினவுகின்றோம்.

பத்திரிகையின் வருங்காலம் பற்றி நடைபெற்ற கருத்துரையில் மின்னியல் தாக்கத்தினால் ஏற்பட்ட தொழில்நுட்ப மாற்றத்துக்கு இன்றைய பத்திரிகைகள் ஈடுகொடுக்குமாவென்ற அச்சம் விரிவாக ஆராயப்பட்டதாகச் செய்தி.

சுடச்சுடச் செய்தியையே பத்திரிகைகளில் எதிர்பார்க்கும் கூட்டத்தால் பத்திரிகைகளுக்கு நிரந்தரஆபத்து ஏற்படமாட்டாதென்ற கருத்து மேலோங்கயிருப்பது தேற்றமளிக்கும் செய்தியாகும்.

எங்கள் பத்திரிகை ஒரு சிறு குடிசைக் கைத்தொழில் என்று கொள்வதில் பெருமையடைகின்றோம்; இயற்கை செயற்கை தாக்கங்களால் அதிக தூரம் பாதிப்படையாத வரம் இவ்வித நிறுவனங்களுக்கு உண்டு. மூர்த்தி சிறிதானாலும் பக்தர்கள் வழிபாட்டுக்கும் போதிய கவர்ச்சி உண்டு.

பெருவிருட்சத்தைப் புரட்டிவிடும் புயல், சிறு செடி கொடியை அசைத்தாலும் அழிக்காது: அக்காரணம் பற்றி நாம் இறுமாப்படையவில்லை; 25 வருட சேவையில் பலத்த அனுபவங்களைப் பெற்ற எமக்கு இப்பெரும் மாநாட்டை எட்டிப் பார்க்கும் பாக்கியம் கிடைக்காதது ஒரு பெரும் ஏமாற்றமே!

## சமாதானம், ஒற்றுமை;

## இவ்விரண்டும் விரும்பும் இருநாடுகள்

இந்திய குடியரசின் 33வது வருடாந்த கொண்டாட்டத்தில் இந்தியஜனாதிபதி நாட்டின் ஒற்றுமையைச் சமாதான வழியில் பேணிக் காக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்.

இந்திய ஜனாதிபதி திரு ஜயில்சிங் இன்று சீக்கியருக்குத் தனி மாநிலம் வேண்டுமென்று போராடும் இனத்துக்கு உரியவர்; இருப்பினும் தேசபக்தியில் எவருக்கும் பின்னில்லாத அகில இந்திய தலைவர். பேச்சுவார்த்தை மூலம் பிரச்னைகளைத் தீர்க்கும் ஆற்றல் இந்திய தேசத்தின் சொந்தப் பண்பென்கிறார்.

இக் கொண்டாட்டத்தை முன்னிட்டு இங்குள்ள இந்தியத் தூதுவர் ஸ்ரீ எஸ். ஜே. எஸ் சத்வால் விடுத்த செய்தியில் இவ்விரு நாடுகளின் தொன்மை மிக்க நட்புறவைப் பாதுகாக்கும் முக்கியத்தை விளக்கியிருக்கிறார்.

இந்தியதேசத்தில் மொழி மத, இன ரீதியில் வளர்ந்த பண்பாட்டின் அடிப்படையில் மாநில ஆட்சிகள் செயற்படுகின்றன; இருப்பினும் சுய நிர்ணயம் போதுமானதல்லவென்ற காரணத்தால் மாநில சுதந்திர இயக்கங்கள் தலையெடுத்திருப்பது தெரிந்ததே!

இலங்கையில் தமிழ் மக்கள் சுதந்திரம், 35 வருடங்களுக்குப் பின்னரும் 'போராட்டம்' என்ற நிலையில் தொடர்கின்றது.

இந்திய – இலங்கை நட்புறவு என்று சொல்லும் போது, இந்திய – இலங்கை அரசுகளின் நட்புறவென்று எவரும் நினைக்கமாட்டார்; அவ்வித உறவு ஆற்றில் இறங்கிவிடும் மண் குதிரை போன்றது.

இவ்விரு நாட்டின்மக்கள் ஒற்றுமைப்படுவதே முக்கியம்; அதற்கு தத்தம் நாட்டில் ஒற்றுமை நிலவுவது பிரதானம். இப்பணியில் ஒருவருக்கொருவர் உதவி செய்தல் வேண்டப்படுவது.

மக்களின் ஒற்றுமை அரசாங்கங்களின் ஒற்றுமைக்கு வழி கோலும் அந்த நிலையில் திருகோணமலை பற்றிய அச்சம் அர்த்தமற்றது.

மலையகத் தமிழர் உரிமை பாதுகாப்பு:

# சென்னையில் அனைத்துக் கட்சிகளின் மாநாடு

(கொழும்பு)

இலங்கை மலையகத் தமிழர் உரிமைப்பாதுகாப்பு மகாநாடு ஒன்று பெப்ரவரி மாதம் 19, 20 திகதிகளில் சென்னை பெரியார் திடலில் நடைபெறவிருக்கின்றது.

தமிழீழத் தோழமைக்கழகம் இந்த மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த மகாநாட்டையொட்டி தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் தலைமையில் வரவேற்புக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அ. தி. மு. வைச் சேர்ந்த டாக்டர் இரா. சனார்த்தனம், இந்திரா காங்கிரஸ் திரு தங்கபாலு, திராவிடர்கழகம் கே. வீரமணி, பாரதீய ஜனதாவைச்சேர்ந்த கே. நாராயணராவ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தா. பாண்டியன், இந்திய ஐக்குடியரசுக்கட்சி ஏ. சக்திதாசன், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கட்சி இரா குலசேகரன், தமிழ்நாடு பார்வார்ட்புளக் அ. அம்பலவாணன் அம்பலம், மற்றும் பெருங்கவிக்கோ டாக்டர் சேதுராமன், தி. மு. க. டி. பி. இராதா கிருட்டிணன், அரு. கோபாலன், ஏ. எஸ். மணவைத்தம்பி, கே. சிட்டிபாபு, டாக்டர் ந அ. ரஷித், ந. அரணமுறுவல் எஸ். சுப்பையா மற்றும் பலர் அங்கம் வகிக்கிறார்கள்.

அயல்நாடுகளில் வாழும் இந்திய வம்சாவழியினரை—அந்த நாட்டின் தேசியச் சிறுபான்மையினரான அனைத்து உரிமைகளுக்கும் தகுதிபடைத்த அவர்களை அகதிளாக்கி வெளியே அடித்துத் துரத்த வகை செய்த லால்பகதூர்–பண்டா (இலங்கை – இந்தியா) உடன்பாட்டை அடியோடு கைவிடக் கோரியும், அது மாதிரியிலான புதியதொரு ஒப்பந்தத்தை இந்திய அரசு இனியும் எந்த வெளிநாட்டுடனும் செய்து கொள்ளாமலிருக்க வலியுறுத்தியும் இந்த மாநாடு கூட்டப்பெறுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

### வடபகுதி பொலிசாரு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சிங்கம் கூட்டியிருந்தார். நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த பொலிஸ் அத்தியட்சகர்கள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

பொலிஸ் சேவையிலுள்ளவர்களுக்கு புதிய இடமாற்றத் திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவேண்டும் என்றும் இம்மகாநாட்டில் கோரப்பட்டது.

பொலிஸ் அத்தியட்சகர்கள் இன்று ஜனாதிபதியைச் சந்திப்பார்கள். இச்சந்திப்பின் போது ஜனாதிபதியிடம் தங்களது கோரிக்கையைச் சமர்ப்பிப்பார்கள். பொலிஸ் அத்தியட்சகர்களைக் கௌரவிக்கும் முகமாக ஜனாதிபதி இன்று மதியபோசன விருந்தளிப்பார்.

### சங்காபிஷேகமும் திருக்கலியாணத் திருவிழாவும்

[யாழ்ப்பாணம்]

காரைநகர் – திக்கரை ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் ஸ்ரீ சண்முகப்பெருமானுக்கு இன்று பகல் சங்காபிஷேகம் நிகழும்.

## மாநாடு வெற்றிபெற யாழ். மேயர் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

நிறவேற்றுமை பாராட்டி கொடிய இனவெறுக்கல் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதற்காக உலக நாடுகளின்ஒருமித்த கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கும் தென்னாபிரிக்காவில்கூட இத்தனை லட்சம் மக்கள் குடியுரிமை, வாக்குரிமை நிராகரிக்கப்பட்டு [illegible] காலமாக நாடற்றவர்களாக வைக்கப்படவில்லை'' இவ்வாறு யாழ். மேயர் திரு. இராஜா விசுவநாதன் சென்னையில் நடைபெறவிருக்கும் மலையகத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டுக்கு அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலோ இந்த மக்கள் 35 ஆண்டுகளுக்குமேல் இவ்விதம் வைக்கப்பட்டு இருப்பதுடன், சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்ட மக்களின் கருத்தை அறிய முயலாது ஆடு, மாடுகளை மந்தையில் விட்டு சந்தையில் விலைபேசுவதைப்போல இலங்கை–இந்திய அரசுகள் இவர்களைப்பரிமாறிக் கொள்ள மனிதாபிமானம் இல்லா முறையில் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளுகின்றன என்று குறிப்பிட்டுள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

பண்டித நேரு இந்தியப் பேரசின் பிரதமராக இருந்தவரை இந்திய வம்சாவழியினரான இலங்கை வாழ். மலையகத் தமிழர்கள்இலங்கையைச் சேர்ந்தவர்களே என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து வந்தார்.

சர்வதேச மரபின்படி இலங்கையில் இம்மக்களுக்கு குடியுரிமை, வாக்குரிமை வழங்கச் செய்வதில் உதவிசெய்ய பண்டித நேரு அவர்களால் முடியாவிட்டாலும்கூட இலங்கைக் குடிரிமைக்கும், வாக்குரிமைக்கும் அவர்களுக்கு இருந்துவந்த உரிமைக்கு அவர் ஊறுசெய்ய முயலவில்லை.

ஆயின் அவருக்குப் பின்வந்த லால்பகதூர் சாஸ்திரியோ முதன்முதலில் இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழியினரில் ஒரு பகுதியினரை அகதிகளாக ஏற்றுக்கொள்ள ஒப்பந்தம் செய்துகொண்டார். போதிய நட்டஈடு இல்லாது அவர்களை அடித்துத் துரத்தவும் வழியேற்பட்டுவிட்டது.

மேற்படி பண்டா–சாஸ்திரி ஒப்பந்தம்கூட 1981 அக்டோபர் 29ம் திகதியுடன் காலவதியாகிவிட்டது. இருந்தும்ஆண்டுடுக்காண்டு இனக் கலவரத்தைத் தூண்டிவிடுவதன்மூலம் மலையகத் தமிழர்கள் தாங்களாகவே தங்களை இந்தியக் குடிகளாகப் பதிவுசெய்துகொண்டு இலங்கையைவிட்டு விரட்டியடிக்கப்படுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆகவே ''பண்டா–லால்பகதூர் சாஸ்திரி உடன்பாடு'' மாதிரியிலான இன்னொரு ஒப்பந்தம் மீண்டும் ஏற்படாதிருக்க கட்சி வேறுபாடு கடந்த நிலையில் தமிழகத்தின் ஒன்றுபட்ட குரலை ஓங்கி ஒலிக்கவதற்காகக் கூட்டப்படும் இலங்கை மலையகத் தமிழர் உரிமைக் காப்பு மாநாடு வெற்றி சிறக்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.''

ஊர்காவற்றுறை பஸ்தரிப்பை

## எந்தக் காரணத்துக்கும் பண்ணைக்கு மாற்றுதீர்!

### த. வி. கூட்டணிக்கிளை வற்புறுத்துகிறது

(யாழ்ப்பாணம்)

''கடல் பிரயாணத்திலும், தரைப்பிரயாணத்திலும்யாழ். மாவட்டத்திலுள்ள வேறு எந்த ஒரு தொகுதி மக்களும் அனுபவிக்காத துன்பங்களையும், இடர்பாடுகளையும் அனுபவித்து வரும் ஊர்காவற்றுறைத்தொகுதி மக்களின் பிரயாணத்துக்காகத் தற்போது யாழ் மத்திய பஸ்நிலையத்தில் உள்ள பஸ்தரிப்பு பகுதியை எந்த ஒரு காரணத்தைக்கொண்டும் பண்ணைக்கு மாற்றி மேலும் தொடர்ந்து கஷ்டங்களை அனுபவிக்க ஊர்காவற்றுறை மக்களுக்கு இடமளிக்கவேண்டாம்''.

வடபிராந்திய இ. போ. சபைத்தலைவரை கேட்கும் மேற்படி தீர்மானத்தை ஊர்காவற்றுறைத் தொகுதி த. வி. கூட்டணிகிளை நிறைவேற்றியுள்ளது, இதன் பிரதியை வடபிராந்திய இ. போ. சபைத்தலைவருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சித்தலைவருமான அ. அமிர்தலிங்கத்திற்கும், யாழ்ப்பாண மாநகர முதல்வருக்கும் அனுப்பியுள்ளது. மேற்படி கூட்டம் ஊர்காவற்றுறைத் தொகுதி எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினத்தின் அலுவலகத்தில் எம். பி. யின் தலைமையில்நடைபெற்றது.

மேலும் இக்கூட்டத்தில்: வட்டக்கிளைகள், மாவட்டக் கிளைகளுக்குப்பதிலாக தொகுதிக்கிளைகளே நிறுவப்படவேண்டும் என்றும் கோப்பாய் தொகுதி த. வி. கூட்டணிக்கிளை நிறைவேற்றி தமிழர் விடுதலைக்கூட்டணியின்செயற்குழுவுக்கு அனுப்பியுள்ள தீர்மானத்தை ஆதரிப்பது என்ற முடிவும் எடுக்கப்பட்டது.

தொகுதியில் உள்ள ஒவ்வொரு கிளையின் பகுதிக்கும் உரிய மொத்தவாக்காளர் தொகையில் 10 வீதமானவர்களை 1ம் கட்டத்தில் கிளை உறுப்பினராக சேர்த்துக் கொள்ளுதல், நிர்வாக சபைக்குக்குறைந்தது 5பேரை ஆயுட்கால உறுப்பினராக்குதல். ஏனையோரில் 10பேராவது ஆயுட்கால உறுப்பினராக ஒவ்வொரு த. வி. கூட்டணிக்கிளையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் ஆகிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. [உ]

### தமிழக சட்ட மேலவையில் அஞ்சலி

சென்னை, ஜன. 26

பூதான இயக்கத் தந்தை வினோபாஜியின் மறைவுக்கும், அண்மையில் லொறிவிபத்தில் அகால மரணமான திருச்செந்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் கேசவ ஆதித்தனார் மறைவுக்கும் தமிழக மேல் சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

சட்ட மேலவைத் தலைவர் ம. பொ. சிவஞான கிராமணி

(8-ம் பக்கம் பார்க்க)

## "ஜனாதிபதியின் வருகையின்போது
# பயங்கரவாதிகள் கறுப்புக்கொடி காட்டப்போவதாக அறிந்தோம்"
## வல்.பொலிஸ் ஜீப்சேதவழக்கில் சப்.இன்ஸ்பெக்டர்சாட்சியம்

(புலோலி நிருபர் திருச்செல்வம்)

"சம்பவதினத்தின் மறுநாள் மாண்புமிகு ஜனாதிபதியின் விஜயம் இப்பகுதிக்கு இருந்தமையினாலும், அவரது விஜயத்தின்போது பயங்கரவாதிகள் சிலர் கறுத்தக் கொடி காட்டப் போவதாகவும் தகவல்கிடைத்ததால் சம்பவ தினம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தோம். வல்வெட்டித்துறைச் சந்தியிலிருந்து சுமார் அரை மைல் தூரத்தில்வைத்து இராணுவத்தினரின் உதவியுடன் 1ம், 2ம் எதிரிகளைக் கைதுசெய்தோம். ஏனையோரைக் கைது செய்ய முடியவில்லை."

இவ்வாறு வல்வெட்டித்துறை பொலிஸ் ஜீப்பிற்குச் சேதமேற்படுத்திப் பொலிசாரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த முயற்சித்ததாகக் கூறப்படும் வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த வல்வெட்டித்துறை சப் இன்ஸ்பெக்டர் திரு. பிரேம்லால் லியன ஆராச்சி (வயது 32 குறிப்பிட்டார்.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் 2ம் திகதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வல்வெட்டித்துறைப் பொலிஸ் ஜீப்வண்டிக்குச் சேதமேற்படுத்திப் பொலிசாரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த முயற்சித்தார்கள் எனக் குற்றஞ்சாட்டி வல்வெட்டித்துறைப் பொலிசார் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வேலும் மயிலும் சிதம்பர நடராசா (குட்டித்துரை), நடராசா சோதிசிவம் என்ற இருவருக்கும் எதிராகப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்துள்ளனர்.

இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

பொலிசார் சார்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் சார்ஜன்ட் தம்பிஐயாவும், 1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். டி. இரத்தினசிங்கமும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி என். கிருஷ்ணராசாவும் ஆஜராகியிருந்தனர்.

தொடர்ந்து சாட்சியமளித்த சப்இன்ஸ்பெக்டர் குறிப்பிட்டதாவது:-

"2-10-82 அன்று பிற்பகல் 6-05 மணிபோல் வல்வெட்டித்துறைப் பகுதிக்கு ரோந்து சுற்றும் கடமையில் ஈடுபட்டிருந்தோம் என்னுடன் சார்ஜன்ட் செல்வராசா, கான்ஸ்டபிள்களான பியதிஸ்ஸ, டேவிட் ஆகியோரும் கடமையிலீடுபட்டிருந்தனர். நாங்கள் சென்ற ஜீப் வண்டியை நானே செலுத்திச் சென்றேன்.

### ஓடினூர்கள்

வல்வெட்டித்துறைச் சந்தியிலிருந்து இரவு 10-30 மணியளவில் பருத்தித்துறைப்பக்கமாக 200 யார் அளவில் சென்ற போது சுமார் 15 இளைஞர்கள் வீதியில் கூட்டம்கூடி நின்றூர்கள். நாங்கள் கிட்டப் போனதும் எங்களைக் கண்டு ஓடினூர் எங்களைப் பார்த்துக் கூக்குரலிட்டார்கள்.

நான் ஜீப்பை நிறுத்தி மீண்டும் இயக்கிக்கொண்டு பருத்தித்துறைப் பாதையை நோக்கிச் சென்று 100 யாருக்கு அப்பாலுள்ள கோவிலடியில் ஜீப்பைத் திருப்பி அதே பாதையால் வல்வெட்டித்துறைச் சந்திக்கு வந்துகொண்டிருந்தோம்.

முதலில் கண்ட அதே இடத்தில் ஆட்கள் கூட்டமாக நின்றதைக் கண்டேன். அவ்விடத்திற்கு வந்ததும் 1ம், 2ம் எதிரிகள் அங்கு நின்றூர்கள். வேறு சிலரும் நின்றூர்கள்.

1ம் எதிரி கல்லை எடுத்து ஜீப்பிற்கு எறிந்தார். ஜீப்பின்முன் கண்ணுடியில் அக்கல் பட்டது. 2ம் எதிரியும் கல்லை ஜீப்வண்டிக்கு எறிந்தார். ஆனல் அக்கல் படவில்லை. இன்னுமொரு கல் ஜீப் கதவுக்கும் மேற்கூடாரத்திற்குமிடையில் பட்டது. நான் உடனும் ஜீப்பை நிற்பாட்டி மீண்டும் இயக்கிக்கொண்டு நிற்காமல் சென்றுவிட்டேன். எங்களைச் சுடுவதற்கு இது ஒரு பொறியாக இருக்குமோவென்று சந்தேகம் ஏற்பட்டபடியாலேயே ஜீப்பை நிறுத்தாமல் ஓடினேன்.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிற்குச் சென்று சுமார் கால் மணித்தியாலத்தின் பின் இராணுவத்தினரின் உதவியோடு மீண்டும் அவ்விடத்திற்கு வந்தேன். சம்பவ இடத்திலிருந்து அரை மைல் தூரம் பருத்தித்துறையை நோக்கி வந்தபோது இரு எதிரிகளும் பருத்தித்துறையை நோக்கிச் செல்வதைக் கண்டேன்.

### கைது செய்தோம்

உடனே நான் ஜீப்பை நிறுத்த, சார்ஜன்ட் செல்வராசாவும், பியதிஸ்ஸவும் இருவரையும் துரத்திப் பிடித்தனர். இவர்களைக் கைதுசெய்தபோது இராணுவத்தினரும் உதவி செய்தார்கள்.

இவ்விரு எதிரிகளையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று அவர்களுக்கெதிராகவுள்ள குற்றச்சாட்டை விளங்கப்படுத்தி பின்னர் மன்றில் வெளிப்படுத்தினேன். பொலிஸ் சார்ஜன்ட் செல்வராசாவே இரு எதிரிகளினதும் வாக்குமூலங்களைப் பதிவுசெய்திருந்தார்.

ஏனைய சந்தேக நபர்களைக் கைதுசெய்ய முடியவில்லை. ஜீப்பிற்கு 1700 ரூபா சேதமேற்பட்டது. ஜீப்பில் பட்ட அக்கல் ஜீப்பிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தருக்குப் பட்டிருந்தால் பெரிய காயம் ஏற்பட்டிருக்கும். அக்கல்லை நான் காணவில்லை. ஜீப்பில் ஏற்பட்ட சேதத்தைப் பார்த்தபோது சாதாரணமாக ஒரு பெரிய கல்லாக இருக்குமென நான் ஊகிக்கின்றேன்.

கல் எறியப்பட்டதும் எங்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லாதபடியினாலேயே ஜீப்பை நிறுத்தி எதிரிகளைப் பிடிக்க முயற்சிக்கவில்லை. சம்பவத்திற்கு மறுநாள் மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் இப்பகுதிக்கு விஜயம் செய்ய இருந்ததாலும் அவரின் விஜயத்தின் போது பயங்கரவாதிகள் சிலர் கறுத்தக் கொடிகாட்டுவதாகவும் தகவல்கள் கிடைக்கப்பட்டமையினாலும் நாங்கள் ரோந்து சுற்றும் கடமையிலீடுபட்டிருந்தோம்.

இவ்விரு எதிரிகள் உட்பட இன்னும் 15-வாலிபர்கள்வரை சம்பவம் நடந்த இடத்தில் முதல் நின்றூர்கள் இவர்களுடன் நின்ற மற்றவர்கள் ஓடிவிட்டார்கள். அவர்களில் சிலரைக் கண்டால் என்னால் அடையாளம் காட்டமுடியும். வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் சந்தியில் இருந்து சுமார் 200 யார் தூரத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

## "சொர்க்கத்திலாவது ஒன்றுக இணைவோம்!"
### கடிதம் எழுதிவைத்துவிட்டு இளைஞர் தற்கொலை!

[கிளிநொச்சி]

விரும்பிய பெண்ணை கரம் பிடிக்கமுடியவில்லை என்று கவலைகொண்ட இருபத்து மூன்று வயதுடைய இளைஞர் 'சொர்க்கத்திலாவது ஒன்றுக இணைவோம்' என்று கடிதம் எழுதிவைத்துவிட்டு கிருமிநாசினியிடம் தஞ்சமடைந்தார்.

கிளிநொச்சி பொலிஸ் பகுதியைச் சேர்ந்த புன்னநீராவி என்னும் கிராமத்தில் வசிக்கும் வேலையா ஜெயசங்கர் என்பவரே மரணமானவராவார்.

இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் மேற்கொண்டார்.

தற்கொலை மரணமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

### முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின்
## பாரதி கண்காட்சி மாசி மாதம் நடைபெறும்

[கொழும்பு]

இலங்கை, முற்போக்கு எழுத்தாளர்சங்கம், பாரதி நூற்றுண்டுவிழா தேசியக்குழுவின் அனுசரணையுடன் நடத்தும் சிறப்பு நிகழ்ச்சியான பாரதிபுத்தகக் கண்காட்சியும், பாரதி பரம்பரையினரான ஈழத்தமிழ் எழுத்தாளர் புகைப்படக் கண்காட்சியும் தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. மார்கழி இறுதிவாரம் நடைபெறுவதாக முற்கூட்டி அறிவிக்கப்பட்ட இக் கண்காட்சி, எதிர்வரும் மாசி 12ம் 13ம் தினங்களில் (சனி, ஞாயிறு) பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சிறப்பாக நடைபெறும்.

பாரதியார் தொடர்பாக உலக நாடுகளில் இதுவரை வெளியான நூல்களும், சஞ்சிகைகளும் ஆக்கங்களும் பாரதி கண்காட்சியில் இடம் பெறும், கண்காட்சியில் பார்வைக்கு வைக்க விரும்புவனவற்றைத் தந்துதவ முன் வருவோர் ஜே 1, பம்பலப்பிட்டி அரசினர் மாடி வீட்டில் திறக்கப்பட்டுள்ள நூல் சேகரிப்பு நிலையத்திற்கு அனுப்பி வைத்து பற்றுச்சீட்டுப்பெறும் வண்ணம் கேட்கப்பட்டுள்ளனர். கண்காட்சிக்குப் பெறப்படுவன பத்திரமாகப் பயன்படுத்தப்பட்டபின் பாதுகாப்பாக ஒப்படைக்க இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உறுதியளித்துள்ளது.

புகைப்படக் கண்காட்சிக்குப் புகைப்படமும், எழுத்தாளர் பற்றிய விபரணமும் சமர்ப்பிக்காத எழுத்தாளர் அவற்றை உடன் அனுப்பி வைக்கும்படியும், பாரதி கண்காட்சி முழுநிறைவான கண்காட்சியாக மலர பாரதி பக்தர்களும், தமிழ்நெஞ்சங்களும் தாமாக முன்வந்து உதவவேண்டுமெனவும் கண்காட்சிச் செயலவையின் சார்பில் கண்காட்சிச் செயலர் திரு. வேல் அமுதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கிளிநொச்சி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றது. நேற்று இரவு 9 மணியிலிருந்து 10 மணிவரை கிளிநொச்சிமக்கள் அஞ்சலிசெலுத்தினர். சடலங்களுடன் கூடச் செல்லும் 21 யாத்திரிகர்களுக்கும் மக்கள் ஆறுதல் தெரிவித்தனர்.

காந்தீய இயக்கத்தைச் சேர்ந்த திரு ப. வை. ஜெயபாலன் எல்லா ஒழுங்குகளையும் கவனித்துவருகிறுர்.

# அரச பதவி வெற்றிடங்கள்

### பிரதிப் பணிப்பாளர் பதவி

காட்டு ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதிகள்: விலங்கியல், தாவரவியல், இரசாயனம் என்பனவற்றில் 1ம் அல்லது 2ம் வகுப்புப் பட்டத்தினைப் பெற்றிருப்பதுடன் நிர்வாகப் பதவியில் இரண்டு வருட அனுபவம் தேவை. வயதெல்லை 30 தொடக்கம் 45 வரையாகும். விண்ணப்பிக்க கடைசித் திகதி வருகிற 10-2-83 ஆகும். விபரங்களுக்கு 21-1-83 வர்த்தமானி பார்க்கவும்.

### தொழில்நுட்ப உதவியாளர்

கரையோரம் பேணற் பிரிவின் சிரேஷ்ட தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி 3பாடங்களில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியும், மின்னியல்/இலத்திரனியல் என்பவற்றில் டிப்ளோமா பெற்றிருப்பதுடன் இத்துறையில் 5 வருட அனுபவமும் தேவை. வயதெல்லை 25க்கும் 45க்கும் இடைப்பட்டதாகும். விண்ணப்பம் அனுப்பும் கடைசித் திகதி 21-2-83 ஆகும். விபரங்களுக்கு 21-1-83 வர்த்தமானி பார்க்கவும்.

### புலமைப் பரிசில்

ரஷ்யப் பல்கலைக்கழகங்களில் பட்டப் பின் படிப்பினை மேற்கொள்வதற்கு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பதாரி: ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருப்பதுடன், பல்கலைக்கழகம் ஒன்றில் குறைந்தபட்சம் இரண்டாந்தரப் பட்டமேனும் பெற்றிருக்கவேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசித் திகதி வருகிற 10-2-83 ஆகும். விபரங்கட்கு 21-1-83 வர்த்தமானி பார்க்கவும்.

### கவுணவத்தை வைரவர் ஆலய
## உயிர்ப்பலிபற்றிய வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

[மாவிட்டபுரம்]

கீரிமலை கருகம்பானை கவுணவத்தை வைரவர் ஆலய உயிர்ப்பலி தொடர்பான மனுவின் விசாரணை மீண்டும் ஏப்ரல் 7-ம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தில் வழமையாக இடம் பெற்றுவந்த ஆடு, கோழி பலியிடுதலைப் பொலிசார் தடைசெய்யக் கூடாதென உத்தரவிடுமாறு கோரி ஆலய முகாமையாளர் ஆறுமுகம் வைத்தீஸ்வரன் மல்லாகம் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இம்மனு ஏற்கனவே பல முறை மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அச்சமயம் மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகள் வழமைபோல் இந்த உயிர்ப்பலியை நடத்த நீதிமன்றம் அனுமதிப்பதுடன் அதனைத் தடை செய்ய வேண்டாமெனவும பொலிசாருக்கு உத்தரவிட வேண்டுமெனக் கோரினர்.

உயிர்ப்பலிபற்றி கேள்விப் பட்டதும் பொலிசாரும், இராணுவத்தினரும் ஆலய வளவில் வந்து முகாமிடுகிறுர்கள் இதனல் ஆலயத்திற்குவரும் பக்தர்கள் உயிர்ப்பலியை நிறைவேற்ற முடியாமல் தடை ஏற்படுகிறது. நீதிமன்றத்தில் பொலிசார் சமர்ப்பித்த அறிக்கையில் தாம் உயிர்ப்பலியைத் தடை செய்யவில்லையெனத் தெரிவித்துள்ளனர். ஆனல் தடைசெய்யும் விதத்தில் அவர்கள் நடந்துள்ளனர். ஆகவே நீதிமன்றம் இவ்விடயத்தில் அக்கறை காட்டி வழமைபோல் உயிர்ப்பலியை நடத்த வழி சமைக்கவேண்டும். அத்துடன் உயிர்ப்பலியைத் தடை செய்வது குறித்து சட்டரீதியாக எவ்வித தடையும் இல்லாதிருப்பதால் நீதிமன்றம் அதற்கு அனுமதிக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

எதிர்மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இவற்றை எதிர்த்துக் கருத்து வெளியிட்டார்.

உயிர்ப்பலியைத் தடை செய்யச் சட்டம் இல்லாதபோதும் மிருகங்கள், பறவைகளை கொடுமைப்படுத்தக்கூடாதென்று சட்டம் இருக்கிறது. அதன்கீழ் இந்த உயிர்ப்பலியை தடைசெய்யவேண்டும். அநாகரிகமான இச்செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றுர்.

மனுதாரர்தரப்புச் சட்டத்தரணிகள் இதற்குபதிலளிக்கையில் மிருகங்கள் பறவைகளை கொடுமைப்படுத்தக் கூடாது என்ற சட்டம் ஏற்கனவே இருந்தபோதும் வழமைபோல் இந்த உயிர்ப்பலி இடம்பெற்று வந்திருக்கிறது. இப்போது மட்டும் அதனைத் தடைசெய்வது

(8ம் பக்கம் பார்க்க)

## குமரி அனந்தன் இலங்கை விஜயம்

(கொழும்பு)

கொழும்பில் அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் பாரதி விழாவில் கலந்துகொள்வதற்காக தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்களான சிதம்பர ரகுநாதன், ராஜம்கிருஷ்ணன், பேராசிரியர் ராமகிருஷ்ணன் ஆகியோருடன் தமிழக அரசியல் வாதியான காமராஜ் கட்சித் தலைவர் திரு. குமரி அனந்தனும் இலங்கை வருகின்றனர்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இவ்விழாவை நடத்துகிறது.

மேற்படி சங்கத்தின்சார்பில் அகிலஇலங்கைரீதியில் நடைபெற்ற குறுநாவல் கவிதைப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு இவ்விழாவில் பரிசு வழங்கப்படும். (இ)

## பிரிவுபசாரம்

[அரியாலை]

சுன்னாகம் அஞ்சல் அலுவலகத்தில் உதவித் தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். நாகேஸ்வரசர்மா செங்கலடி தபால் அலுவலகத்திற்கு இடமாற்றம்செய்யப் பட்டுள்ளார்.

சுன்னாகம் தபால்நிலைய ஊழியர்களால் திரு. எஸ். நாகேஸ்வர சர்மாவுக்குப் பிரிவுபசாரம் நடத்திக் கௌரவித்தனர். இவரது சேவை நலம்பற்றி பல ஊழியர்கள் பேசினர்.

## ஆழிக்குமரன் ஆனந்தனுக்கு கொழும்பில் பாராட்டு விழா

(கொழும்பு)

எட்டு உலகசாதனைகளை நிலைநாட்டி 'கின்னஸ்' புத்தகத்தில் இலங்கையின் பெயரை இடம்பெறச் செய்த ஆழிக்குமரன் ஆனந்தனைக் கௌரவிக்குமுகமாக கலை, இலக்கிய, பத்திரிகை நண்பர்கள் இம்மாதம் 29ம் திகதி சனிக்கிழமை மாலை 4–30 மணிக்கு பம்பலப்பிட்டி கிறீன்லண்ட்ஸ் ஹோட்டலில் தேநீர் விருந்தொன்றை அளிக்கின்றனர்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தலைவர் திரு. இ. சிவகுருநாதன் இவ்வைபவத்திற்குத் தலைமை தாங்குகிறார்.

(இ)

## அசாம் தேர்தல் 524 பேர் போட்டி!

புதுடில்லி ஜன 26

அசாமில் நடைபெறவுள்ள 122 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான தேர்தலில் 524 பேர் போட்டியிடுகின்றனர். 4 பேர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். [வெ]


# வாழ்க்கை முழுவதும் ஆயிரம் தொல்லைகள்.







இன்றைய வாழ்முறை வேகத்திற்கேற்ப முழுநாளும் தேவைப்படும் சக்திச் சமனிலையை எனது குடும்பத்திற்கு வழங்க வேண்டியது தாய் என்ற முறையில் எனது கடமை இறது. இல்லையேல் என் குடும்ப சுகாதாரம் சீர்குலைந்து விடும் என்பதை நான் நன்கு அறிவேன்.

எனவே தான் எனது குடும்பத்திற்கு வேண்டிய மேலதிக சக்திக்கு நெஸ்டோமோல்ட் வழங்குவதென்று நிச்சயப்படுத்தியுள்ளேன்.

முழுச் செழுமை மிக்க நெஸ்டோமோல்ட், முழு ஆடைப்பால், விட்டமின் B, மோல்டட் பார்லி சாரம் கொண்ட தூய ஆரோக்கிய உணவு.

என்குடும்பம் எப்பொழுதும் ஆரோக்கியத்துடனும், சுறுசுறுப்போடும் திகழ்வதால்,

நெஸ்டோமோல்ட் டிற்கு எனது நன்றி.

450 கிராம்: ரூ. 43 90

Nestlé

நெஸ்டோமோல்ட்
உங்கள் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த உகந்த பானம்

HTL CN 1141

# கப்பம் வாங்குவதில் புதியயுக்தி

(வவுனியா)

மாடுகளைக் கடத்திச்சென்று பின்னர் அவற்றின் உரிமையாளர்களிடம் கப்பம் வாங்கிக்கொண்டு மாடுகளை ஒப்படைத்துவந்த ஒரு கோஷ்டியில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். கோத்து பண்டா, சுமணபால, நிமால் ஆகிய மூவருமே வவுனியாப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டவர்களாவர். இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

அண்மையில் இவர்கள் பலரது மாடுகளை கடத்திச் சென்று பின் நூற்றுக்கணக்கான ரூபாபணத்தை கப்பமாகவாங்கி இந்த நாடகத்தை நடத்திவந்துள்ளார்கள்.

பூந்தோட்டம் என்னுமிடத்தைச் சேர்ந்த கணேசலிங்கம் என்பவருடைய 3500 ரூபா பெறுமதிவாய்ந்த ஒரு சோடி எருதுமாடுகளைக் கடத்திச் சென்று பின்னர் இவரிடம் கப்பப்பணமாக 800 ரூபாய் இவர்கள் வாங்கியபோது கணேசலிங்கம் பணம்பெற்ற வரது பெயர்களை அறிந்து வவுனியாப் பொலிசாருக்கு விஷயத்தைத் தெரிவித்தார்.

பொலிசார் உடன் விரைந்து இம் மூவரையும் கைதுசெய்து வவுனியா மாவட்டநீதிபதி திரு. கே. பெத்தியாகொட முன் ஆஜர் செய்யப்பட்ட போது இவர்களை விளக்கமறியலில்வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் நீண்டகாலமாகப் பொலிசாரால் தேடப்பட்டவர்கள் என விசாரணையின்போது தெரியவந்தது. இம் மூவரும் பிரபலமான கேடியர் என விசாரணையில் தெரியவந்தது. (வ)


சாந்தி 25-27 யாழ்.
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ராஜஸ்ரீ
அனுபவம் புதுமை
(புதிய பிரதி)

கடைசி சிலதினங்கள்
ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
3-2-83 முதல்
சிவாஜி-சாவித்திரி
கர்ணன்
[ஈஸ்ட்மன் கலர்]

வெல்லி(மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி.ஞாயிறு2-30
நானும் ஒரு பெண்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்)

றீகல் (யாழ். நகர்)
கடைசி சில தினங்கள்
எங்க வீட்டுப் பிள்ளை

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் : ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி - விஜயா - நம்பியார் நடித்த
30-1-83 வரை
ராமன் எத்தனை ராமனடி
31-1-83 முதல் மாயா பஜார்

மனோகரா
[யாழ்நகர்] தினசரி 10-30, 2-15, 4-45, 7-00 9-30p.m.
Weng Weng in
FOR YOUR HEIGHT ONLY
(Bond Film color)
4-2-83 முதல் பாதாள பைரவி

வின்ஸர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)


# இன்றைய பலன்

தை மாதம் 14-ந் திகதி
வியாழக்கிழமை
(27—1—83)

மேடம்: இதயம் இன்றுஇன்பத்தால் விம்மும், குடும்பத்தில் உறவு முறைகள் மிகவும் அன்பு கொண்டதாக இருக்கும். புத்திரர்களாலும்மதிப்பு உயர்வதற்கு இடமுண்டு.

இடபம்: அன்னிய வாசம் அமைதியைக் குலைக்கும். அபாய காரியங்களில் ஈடுபடாது இருக்கவும். வெளியிடத்துப் பயணம் வேதனையைத்தரும், பிறர் நம்பிக்கை இன்று கூடாது.

மிதுனம்: ஆணவப் போக்கு அடிசறுக்க வைக்கும். பின்னணியில் மோசடி வேலைகள் நடைபெறும். மேலதிகாரிகளின் கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும்.

கடகம்: முன்னாள் ஆசிரியர் ஒருவர் உமது முன்னேற்றத்துக்கு வழிகாட்டுவார். அடக்கமான நடவடிக்கைகளின்மூலம் மற்றவர்களின் மனதைக்கவருவீர்கள்.

சிங்கம்: இலட்சியக் கனவுகள் இன்று கானல்நீராகலாம். பின்னணியில் பிளவுக்கு இடம் ஏற்படும். உணர்ச்சி வசப்படுவதால் எதிர்பாராத விளைவுகள் ஏற்படும்.

கன்னி: இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும். காதல் கணை தாக்கும், கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள், எண்ணங்கள் ஆயிரம் கற்பனையினால் வெற்றி காணும்.

துலாம்: இதயங்கள் இணைவதற்கு இன்று நல்ல நாள். அபிப்பிராய பேதங்கள் மறையும், பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். பந்துக்கள் ஆதரவு பெருகும்.

விருச்சிகம்: அறவழிகளை மனம் நாடும். பொது விவகாரங்களில் ஈடுபடுவதன்மூலம் பொருட் செலவுக்கு இடமுண்டு. சுற்றுடலில் சிலருக்கு மனவிரக்தி தென்படும்.

தனு: உல்லாசமாக பொழுதைப் போக்குவீர்கள். இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள். பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரலாம்.

மகரம்: ஆசை அலைகளால் அவப் பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழிகளில் இறங்க வேண்டாம். வீட்டில் சிறு பிணி தலைதூக்கும். சிறிய விடயத்திற்குக் கூடபெரியகோபம் தோன்றும்.

கும்பம்: பெருமையுடன் தலை நிமிர்ந்து வாழ்வீர்கள். பிதா வழித் தனமும் சேரும். தான தருமங்களில் ஈடுபாடு ஏற்படும். பெரியோர்கள் ஆசி கூறுவார்கள்.

மீனம்: கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும். அரசினர் ஆதரவு கிடைப்பதற்கு இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## முதலிடம்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு, யாழ்.பெரியகடைப் பகுதிகளில் உள்ள கடைவாசல்களில் எல்லாம் ஏறி, ஏறி இறங்கி அலைந்து திரிவார்,

இந்த ஆலயத் திருப்பணிக்கு எல்லோரும் தங்களால் இயன்றளவு நிதி உதவி; கொடுத்து, பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கேட்டுக் கொண்டார்.

திரு. சுப்பிரமணிய செட்டியார் நன்றியுரை நிகழ்த்தினார். [மா]

# 65 வயதுவரை சேவை: ஆசிரியர்க்கு சந்தர்ப்பம்!

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களுக்கு 65 வயது வரை சேவையாற்ற சந்தர்ப்பம் உள்ளது. இதனை விளக்கி இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

55 வயதுக்கு மேல் ஆசிரியர்கள் சேவையாற்ற முடியாது என்ற குழப்ப நிலையைத்தவிர்ப்பதற்காகவே இவ் அறிக்கையை விடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

"சாதாரணமாக எந்த ஒரு ஆசிரியர் உடல்நிலை, மனோநிலை கற்பித்தலுக்கு தகுதியாகக் காணப்பட்டால் 55 வயது பூர்த்தியடைந்த பின்னர் 60 வரை வருடாவருடமாக சேவை நீடிப்பைப் பெறமுடியும். 56, 57, 58ம் வயதுக்கான சேவை நீடிப்பை மாவட்டக் கல்விப்பணிப்பாளரே வழங்கலாம். 59, 60ம் வயதுக்கான சேவை நீடிப்பை கல்வி அமைச்சின் செயலாளரே வழங்குவார்.

60 வயதைப் பூர்த்தியடைந்தவர்கள் ஒய்வூதியத்தைப் பெற்றுக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் 65 வயது வரை மீண்டும் நியமனம் பெற்று சேவை செய்யலாம். ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் நியமனம் வழங்கும் அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாளருக்கே உண்டு.

"ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் நியமனம் பெறும் ஆசிரியர்கள் ஓய்வூதியத்தையும், மாதவேதனத்தையும் பெறலாம். அத்துடன் அவருக்கு ஏனைய அரச ஊழியருக்கு இருப்பதுபோல லீவு, புகையிரத ஆணைச்சீட்டு போன்ற சலுகைகளும் உண்டு.

"விசேட பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது பந்த அடிப்படையில் சொந்த ஊரிலேயே ஒப் சேவை செய்ய அனுமதிக்கப்படுவர். பொதுப்பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாத்திரம் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெற விரும்பின் கிளிநொச்சி, ஊர்காவற்றுறை, மன்னார், நுவரெலியா, பண்டாரவளை போன்ற கஷ்டப் பிரதேசங்களில்சேவையாற்ற நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்கள் க. பொ. த. உயர்தர வகுப்பில் கற்பிக்க மறுக்குமிடத்து அல்லது கற்பிக்கத் தகுதியில்லை எனக் கல்வித் திணைக்களம் காணும் இடத்து 55 வயதுக்குப் பின்னர் சேவை நீடிப்பு வழங்காது கட்டாய ஒய்வில் அனுப்பப்படுவார்கள்." (மா)

## புதிய உறுப்பினர்



யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினராக திரு கயித்தான் நீக்கிலாஸ் ஆசீர்வாதம் பதவி ஏற்றுள்ளார்.

சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவரான இவர், சீநோர் நல்லொழுக்க வாலிபர் சம்மேளனத்தின் பொருளாளரும் ஆயுள் காப்புறுதி வெளிக்கள உத்தியோகத்தர் சங்க உபதலைவரும் யாழ்ப்பாணத் தொகுதி த. வி. கூட்டணிக் கிளைக் காரியதரிசியுமாவார்.

தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொதுச்சபை உறுப்பினரான திரு ஆசீர்வாதம், பாரதி சனசமூக நிலையப் போஷகராயும், சென்றேசிஸ் ச. ச. நிலைய நிர்வாகஉறுப்பினருமாக இருக்கிறார்.

கனவான் ஒப்பந்தத்திற்கு அமைய யாழ். மாநகரசபை உதவி முதல்வர் திரு. ம. அலோசியஸின் ராஜினாமாவை அடுத்து திரு. என். டி. செல்லத்துரை உதவி முதல்வராகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து இவர் நியமனம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (மா)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று மாலை 6-30மணியளவில் பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தலைவர் வெ. அன்பழகன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்துக்கு சிறப்பு விருந்தினர்களாக எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம், பண்டிதர் ப. இராசகுரு ஆகியோர் கலந்து கொள்கின்றார்கள். ய

## தனிச்சிங்களத்தில் படிவங்கள்

(பண்டத்தரிப்பு)

கடந்த 1978ம்ஆண்டில்பாடசாலைகளில் 4ம், 5ம் தர அதிபர்கள் பதவிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்குமேற்படி அதிபர் பதவியினை ஏற்க விருப்பமா? என்று கேட்கும் கடிதங்களையும், அதற்கான படிவங்களையும் தனிச்சிங்களத்தில் கல்விச் சேவைகள் அமைச்சு கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ளது.

தனிச்சிங்கள மொழியில் இக்கடிதமும், நிரப்பியனுப்பும் படிவமும் தமக்கு வந்துள்ளதாகவும், சிங்களம் தெரிந்த பலரிடம் கேட்டும் சரியான மொழி பெயர்ப்பை தாம் அறிந்து கொண்டு பதில் கடிதம் எழுத முடியாத நிலையில் இருப்பதாகவும் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்து சித்தி பெற்ற இப்பகுதியைச் சேர்ந்த பாடசாலை அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

## சட்டத்தரணிகளுக்கு வரவேற்பு

(மாவிட்டபுரம்)

மலலாகம் கொலை வழக்கில் விடுதலையான 1ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். பாலாதம்பு, சட்டத்தரணி ஆர். ஜி. செல்வரத்தினம் ஆகியோருக்கு நேற்று மாலை கீரிமலையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

மாவிட்டபுரத்தில், சட்டத்தரணிகளை மாலைசூட்டி வரவேற்று கார் பவனியாகக் கீரிமலைக்கு அழைத்துவந்தனர்.

கீரிமலைச்சந்தியில் பெருந்திரளான மக்கள் சட்டத்தரணிகளுக்கு மாலை சூட்டி, வெடி கொளுத்தி அழைத்துச் சென்றனர்.

அங்கு நடந்த வரவேற்பில் சட்டத்தரணிகளுக்கு பாராட்டும், நன்றியும் தெரிவிக்கப்பட்டது. [க]

## 25 பேருக்கு ஆயுட் சிறை

ரோம் ஜன. 26.

இத்தாலி முன்னாள் பிரதம மந்திரி அல்டோ மொறோவை கடத்திச் சென்று படுகொலை செய்த 25 பேருக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விசாரணை கடந்த 10 மாதங்களாக ரோம் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. [வெ]

# மூன்று சடலங்களுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதியான சுங்க உதவிசேகரிப்பாளர் திரு. சி. சிவகுருநாதன் முன்னிலையில் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தின் 2வது அதிகாரி ஏ. ஜி. நட்கர்ணி, பிரேதங்கள் வைக்கப்பட்ட பெட்டிகளுக்கு மேலும் பாதுகாப்பாக வேறு 3 பெட்டிகளில் அவற்றை வைத்து நடாவினால் சுற்றி மெழுகிட்டு சீல்வைத்தார்.

இறந்தவர்களின் உறவினர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் சொன்னார். இவர்களின் நலனைக் கவனித்து வந்த ஸ்தாபனங்களுக்கும், பிரமுகர்களுக்கும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் மீதி 12 பேரையும் திரு. அமிர்தலிங்கம் சென்றுபார்வையிட்டார்.

### காந்தீயத்தின் மினி லொறியில்...

நேற்றுக்காலை பரந்தன் முல்லைத்தீவு வீதியிலுள்ள வை. எம். சி. ஏ. இளைஞர் பயிற்சி நிலையத்தில் தங்கியிருந்த ல யாத்திரிகர் 15 பேரும் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டனர். இவர்களுக்கெல்லாம் உதவி செய்துவந்த காந்திய இயக்க அமைப்புச் செயலாளர் திரு. ப. வை. ஜெயபாலன், இயக்கத்துக்குச் சொந்தமான மினிலொறி ஒன்றையும் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்தார். இந்த வாகனத்திலேயே பிரேதப் பெட்டிகள் வைக்கப்பட்டு மன்னாருக்கு எடுத்துச்செல்லப்பட்டது. மற்றும் கிளிநொச்சி ரோட்டரிக்கழகம், கிளிநொச்சி மாணவர்ஒன்றியம், ஈழமாணவர் பொதுமன்றம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் உதவிகளில் ஈடுபட்டிருந்தனர்.

### தொலைபேசியில் யாழ். எம். பி.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், கொழும்பிலிருந்து, அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமைகளை கேட்டறிந்து கொண்டிருந்தார்.

### 15 ஆயிரம் செலவு

3 பிரேதங்களும் கொண்டு செல்வதற்கு இதுவரை சுமார் 15 ஆயிரம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதென்றும், யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வர்த்தகர்களும், பிரமுகர்களும், வசதிபடைத்தோரும் இப்பணத்தை தந்துதவுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

மன்னாரிலுள்ள இந்திய தூதுவராலயத்தைச் சேர்ந்த திரு. ரங்கநாதன் மூன்று சடலங்களையும் சம்பந்தப்பட்ட 21 பேரையும் தமிழ்நாடு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

இன்று அதிகாலை 4 மணிக்கு மன்னாரிலிருந்து புறப்படும் கப்பலில் மூன்று சடலங்களுடன் 21 பேர் இந்தியா செல்வர்.

### ஹோர்லிக்ஸ் அன்பளிப்பு

நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்தின் வேண்டுகோளின்பேரில் நல்லூர் தொகுதியின் சார்பில் சிகிச்சை பெற்றுவரும் யாத்திரிகர்களுக்கு திரு. பெ. கனகசபாபதியும். மாநகரசபை உறுப்பினர் திரு. சு. சண்முகராசாவும் ஹோர்லிக்ஸ் அன்பளிப்புச் செய்தனர். (மா)

# நள்ளிரவில் வழிமறித்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுவிட்டு பருத்தித்துறைக்கு திரும்பிக்கொண்டிருந்த போதே நெல்லியடிச் சந்திக்கருகில் திரு. திலகன் ராணுவச் சிப்பாய்களால் வழிமறிக்கப்பட்டு தரக்குறைவாக நடத்தப்பட்டதாகத் தெரியவருகின்றது.

திரு. திலகனின் கார் இரவு 12 மணியளவில் நெல்லியடிச் சந்தியை அண்மித்தபோது, ராணுவ டிரக் ஒன்றில் வந்த ராணுவ உடைதரித்த சிப்பாய்கள் காரை நிறுத்தினார்களாம். அப்பொழுது காரின் முன் ஆசனங்களில் கார்சாரதியும். நீதிமன்ற ஆராச்சியும் இருந்தனர். துப்பாக்கிகளுடன் காரைச் சுற்றிவந்த சிப்பாய்களிடம் பின் ஆசனத்தில் மாவட்ட நீதிபதி இருப்பதாக சாரதியும் ஆராச்சியும் கூறியுள்ளனர். நீதிபதி என்பது எங்களுக்கு எப்படித் தெரியும் என்று அவர்கள் கூறியுள்ளனர். அதேசமயம் காரிலிருந்து இறங்கிய நீதிபதி தாம் முன்பு ஊர்காவற்றுறை நீதிபதியாகக் கடமையாற்றியிருப்பதாகவும், இப்பொழுது பருத்தித்துறைக்கு மாற்றலாகிவந்திருப்பதாகவும் தெரிவித்து காரை சோதிப்பதாயில் சோதிக்கலாம் என்றும் கூறியிருக்கிறார். நாங்கள் நினைத்த நேரத்தில்தான் பரிசோதிப்போம் என்று கூறிய அவர்கள் அடையாள அட்டையைக் கேட்டனராம்.

இதற்கிடையில் அங்குவந்து சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும் ராணுவ சிப்பாய்களுடன் சேர்ந்து கொண்டாராம். சுமார் அரைமணிநேரம் திரு. திலகனைத் தாமதிக்கச் செய்தபின்னர் அவரைப் போக விட்டனராம். இதுநடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளையில் அவ்வழியாக வந்த கார் ஒன்றை இரண்டு நிமிடங்களில் பரிசோதித்துப் போகவிட்டார்களாம்.

இச்சம்பவம் நடந்த அடுத்த தினம் பருத்தித்துறை நீதிபதியை வந்து சந்தித்த இரு இராணுவ அதிகாரிகள் முதல் நாள் இரவு நடந்த சம்பவத்துக்காக கவலை தெரிவித்துக் கொண்டுள்ளனர். சம்பந்தப்பட்ட சிப்பாய்கள் வந்து கவலை தெரிவித்தால் மட்டுமே தாம் மேல்நடவடிக்கை எடுப்பதை கைவிடமுடியும் என்று அவர்களுக்குத் தெரிவித்த நீதிபதி; அவர்கள் அவ்வாறு வராதமையால் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதில் சம்பந்தப்பட்டவரான பாதுகாப்பு அதிகாரியை பருத்தித்துறை பொலிசார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது அவரது வாக்கு மூலத்தைப் பதியும்படி நீதிபதி பணித்தார்.

# பயங்கர வாத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பக் கன்னியர் மடம் ஆகியவற்றின் மாணவ மாணவிகளையும் இணைத்துக் கொண்டு, பின்னர் முதலாம் குறுக்குத்தெரு ஊடாக சென்று வேம்படி மகளிர் கல்லூரிவாசலை அடைந்தனர்.

அப்பொழுது கொக்குவில் இந்துக்கல்லூரியிலிருந்து புறப்பட்ட ஊர்வலம் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவ மாணவிகளையும் சேர்த்துக் கொண்டு பிறவுண் வீதி- இராமநாதன் வீதி ஊடாக யாழ். பல்கலைக்கழகத்தை அடைந்தது.

மிக உத்வேகத்துடன் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்த மாணவர்கள், யாழ். நகர பஸ்நிலையத்தை அடைந்து. 'பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு' 'மாணவர் சக்தி மாபெரும்சக்தி', 'மாணவர்களை விடுதலைசெய்', மதகுருமாரை விடுதலை செய்', 'சித்திரவதை வாக்குமூலங்கள் சாட்சியங்கள் ஆகுமா' என்று பல கோஷங்களை எழுப்பினர்!

பின்னர் ஊர்வலம் காங்கேசன்துறை வீதிவழியாக நாச்சிமார் கோவிலடியில் திரும்பி இராமநாதன் வீதிவழியாக மீண்டும் யாழ். பல்கலைக்கழகத்தை நண்பகல் 12 மணிக்கு அடைந்தது.

மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய போதிலும், மிகவும் கட்டுப்பாட்டுடன் அவர்கள் நடந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.


யாழ். வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்லூரி

கல்வியாண்டு 1983/84

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் வெளிநிலைப் பாடநெறிகளுக்கான

| | |
|---|---|
| கலை முதற்தேர்வு | -- G. A. Q. |
| சட்ட முதற்தேர்வு | -- FIRST in LAWS |
| வணிகமுதற் தேர்வு | -- FIRST in COMMERCE |
| விஞ்ஞான முதற்தேர்வு (புள்ளிவிபரவியல்) | G. S. Q. (Statistics) |

பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் நடாத்தப்படுகின்றன

விரிவுரைகள் 28 - 1 - 1983ல் ஆரம்பமாகின்றன

விரிவுரைகளை யாழ், மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்கள்

பாடநெறிகளில் சேரவிரும்புவோர் 28-1-1983 காலை 9 மணிக்கு நேரில் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்

விபரங்களுக்கு:

அதிபர்,
யாழ். வெளிநிலைப் பல்கலைக் கழகக் கல்லூரி,
253 1/1 ஸ்ரான்லி வீதி,
ஸ்ரீதர்கினிமாவுக்கு அருகாமை
யாழ்ப்பாணம்.

YARL EXTERNAL UNIVERSITY COLLEGE

குறிப்பு:- யாழ். வெளிநிலைப் பல்கலைக் கழகக் கல்லூரிக்கு P.S சேவிஸ் ஸ்ரேசன் மேல்மாடி தவிர வேறு கிளை நிறுவனங்கள் கிடையாது. 5983


## மரண அறிவித்தல்

### இராயப்பு செபமாலை

வள்ளுவர்புரம் தையிட்டி காங்கேசந்துறையைச் சேர்ந்தவரும் மயிலிட்டி முன்னாள் கிராமசபை உறுப்பினருமான இராயப்பு செபமாலை அவர்கள் நேற்றுக் காலை 9 மணியளவில் காலமானார். இவர் பிலோமினா அவர்களின் அன்புக் கணவரும், காலம் சென்ற மினுசி இராயப்பு - காலம் சென்ற மதலேனா அவர்களின் புத்திரனும், ஆசீர்வாதம் இராசு, மர்சலீன், ஞானம்மா, விக்ரோறியா, காலம்சென்ற ஆரோக்கியநாதர், நேசம்மா ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று காலை (27-1-83) 11 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் சென்று ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்துக்கருகாமையில் உள்ள சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

— இ. இராசு

5986

## மரண அறிவித்தல்

### திருமதி சுலோசனாதேவி

யாழ். கன்னாதிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னுத்துரைப் பத்தரின் மனைவி திருமதி சுலோசனாதேவி காலமானார். இவர் திருமதிகள் கமலாம்பிகை துரையப்பா, ராஜலட்சுமி தர்மலிங்கம், மகேஸ்வரி சின்னராஜா, மாலினி இராமகிருஷ்ணன், சக்திவேல் ஆகியோரின் தாயாரும், மீனலோஜனியின் மாமியும் ஆவார். தகனக் கிரியைகள் 28-1-83 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குக் கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும். 5989

### உயிர்ப்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடாது என தெரிவித்தனர்.

நீதிபதி இவற்றைக்கேட்டபின் விசாரணையை ஏப்ரல் 7-ம் திகதிக்கு ஒத்திவைப்பதாக அறிவித்தார்

மனுதார் தரப்பில் சட்டத்தரணிகள் என் பதமநாதன், ஆர். ஜே செல்வரத்தினம் சு. நடராசா, வி எஸ். கணேசலிங்கம் ஆகியோர் ஆஜராகினர். எதிர்மனுதார் தரப்பில் சட்டத்தரணி அ. குமரகுரு ஆஜரானார்.

### தமிழக

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யார் தலைமையில் மேலவைத் தொடர்க் கூட்டம் நடைபெற்றது இரங்கலுரையை முதலமைச்சர் எம். ஜி ராமச்சந்திரன், தி. மு. க. தலைவர்கள், தமிழக கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். (உ)


# ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்

## புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான 'பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22370—22438—22537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி
தொலை பேசி இல; 22273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] 1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது; Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24136;